கலை: நடனம்

# தொட்டால் சிவன் பார்த்தால் விட்டல்!

ஆர். சஞ்சீவி

எத்தனை முறை பார்த்தாலும் கேட்டாலும் சலிக் காதவை கடவுள் லீலைகள்; அதை வெளிப்படுத்தும் பக்தி இலக்கியங்கள்.

தென்னாட்டில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடிக் களித்திருக்கிறார்கள். வடக்கில் மீரா பாய், ஞானேஷ்வர், நாம தேவர், துக்காராம் போன்றவர்கள் பக்தியையும் இலக்கியத்தையும் வளர்த்திருக்கிறார்கள். அவர்கள் இறை அனுபவங்கள் சிலிர்க்க வைக்கின்றன.

அதை மேடையில் ஆடினார், பரத நாட்டியக் கலைஞர் கலை மாமணி பாலதேவி சந்திரசேகர். அமெரிக்காவில் வசிக்கும் இவர் நாற்பது நாடுகளில் (யுனெஸ்கோ உள்பட) சுமார் முன்னூறு நிகழ்ச்சிகளில் ஆடியிருக்கிறார். இந்தியாவிலும் ஹைதராபாத், மும்பை, பங்களூரு, சென்னை என்று பல ஊர்களில் நடனமாடுகிறார். நந்தனார் சரித்திரம், உத்தவ கீதை, கர்ணன், தஞ்சாவூர் நால்வர், கிருஷ்ணார்ப்பணம் போன்ற பல தலைப்புகளில் ஆராய்ச்சி செய்து நடனமாடி இருக்கிறார்.

அண்மையில் சென்னை அடையாறு கலாக்ஷேத்ராவில் மாவ்லி என்ற தலைப்பில் பாலதேவி நாட்டியம் ஆடினார். மாவ்லி என்ற மராத்திய வார்த்தைக்கு தாயார், மதிப்பிற்குரிய தலைவர் என்று பல பொருள் இருந்தாலும் தாயாரைப் போல் பக்தர்களைக் காக்கும் பாண்டுரங்க விட்டலையே அதிகம் குறிக்கிறது.

துக்காராமின் ஒரு பாடலில் சஞ்சாரிக்கு சந்த் நரஹரியின் ஒரு வாழ்க்கைச் சம்பவத்தைப் புகுத்தியிருக்கிறார். தீவிர சிவ பக்தரான நரஹரி ஒரு பொற்கொல்லர். இவரிடம் விட்டலுக்கு ஒட்டியாணம் செய்யச் சொல்கிறார்கள். மற்றவர்கள் கொடுத்த அளவு சரியாக இல்லாததால் தானே கோவிலுக்குப் போகிறார்.

விஷ்ணுவைக் காண விரும்பாத இந்த சிவ பக்தர் கண்களைக் கட்டிய படியே சிலையைத் தொடுகிறார். ஜடாமுடி, கழுத்தில் தொங்கும் சர்ப்பம் என்று யாவும் சிவன் அடையாளங்களாக உணர்கிறார். கண் கட்டை அவிழ்த்துப் பார்த்தபோது விட்டலனைக் கண்டு மனம் நெகிழ்கிறார். சிவ விஷ்ணு அபேதத்தை விளக்கும் இந்தப் பாடலுக்கு பால தேவியின் அபினயம் நன்றாக இருந்தது.

இன்னொரு சம்பவம். நாமதேவர் வாழ்க்கையிலிருந்து. அவர் கையில் வைத்திருக்கும் ரொட்டியை நாய் கவ்விக்கொண்டு போகிறது. அந்த ரொட்டியில் இன்னும் நெய் தடவவில்லையே என்று நெய்க் கிண்ணத்துடன் 'விட்டலா, விட்டலா' என்று கூவிக் கொண்டு அதன் பின்னால் ஓடுகிறார் நாமதேவர். சகல ஜீவ ராசிகளிலும் பாண்டு ரங்கனைக் காணும் பக்தரின் கதைகள் பகவத் கீதையில் வரும் சம தர்சன வரிகளை நினைவு படுத்துகின்றன.

ஆடி ஏகாதசியில் பக்தர்கள் பகவானை ஆடிப் பாடிக் கொண்டாடுவதும் பக்தர்களின் கதைகளும் ஒரு புனித யாத்திரை போவது போல் இருக்கிறது. இந்த நடன நிகழ்ச்சி முழுவதும் பாலதேவி தனியாக ஆடினார். இடையில் கைகளை வைத்துக் கொண்டு நின்று விட்டலாக அபிநயிக்கிறார். அவரின் சில அசைவுகளில் நடனக் கலைஞர் பத்மா சுப்ரமணியத்தின் சாயல் தெரிகிறது. நேர்த்தியான உடை மற்றும் அலங்காரம்.

பால தேவியின் கொள்ளுத் தாத்தா நீலகண்ட சாஸ்திரிகள், மஹா பெரியவருக்கு சம்ஸ்கிருத நாடகங்களைக் கற்பித்த ஆசிரியர் என்பதும் பூஜ்யஸ்ரீ தயானந்த சரஸ்வதி பூர்வாசிரமத்தில் இவர் தாய் வழி உறவினர் என்பதும் கூடுதல் செய்திகள். ●

